விலைரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 8 ஐ. ஆகர் 26 இதழ் 67

யாழ்ப்பாணம் புதன்கிழமை 21—4—82

பயிற்சி

அதிக அறிமுறை தொழில் முறையுடன் அமைந்த

* வெல்டிங்
* மோட்டார் இயந்திரவியல்

பயிற்சி வகுப்புக்கள் (24-4-82) ஆரம்பம்.

சி. ஈ. ரி.

ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்

(விகாரைக்கு சமீபமாக)

58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[2913]

இன்று ஆரம்பம்:

மருத்துவக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவ சங்கத்தின் மருத்துவக் கண்காட்சி இன்று காலை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகி 25ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியை ஜேர்மன் ஜனநாயக் குடியரசின் இலங்கைத் தூதுவர் டாக்டர் ஜெகாட் பிப்பர் திறந்து வைப்பார்.

இதயம், நெஞ்சு, இரப்பை, குடல், தோல், பல், எலும்பு, கண், நரம்பு நோய்கள்,

(8 ம் பக்கம் பார்க்க)

உலக இந்து மாநாடு இன்று கோலாகலமாக ஆரம்பம்!

ஜனதிபதி ஆரம்பித்து உரை நிகழ்த்துவார்

(கொழும்பு)

அகில உலக இந்து மாநாடு இன்று கோலாகலமாகஆரம்பமாகிறது. மாநாட்டில் கலந்து கொள்ளும் அதிகமான பேராளர்கள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இன்றுகாலை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் யாக பூசையுடன் மாநாடு ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து திருமுறைகள் ஊர்வலம் இடம் பெறும்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் மாநாட்டின் தொடக்க வைபவங்கள், ''நாதஸ்வர சக்கரவர்த்தி'' என்.கே.பத்மநாதன் கோஷ்டியினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று பிற்பகல் 4-50க்கு மகாநாட்டை தொடக்கிவைப்பார்.

அமைச்சர் செ. இராசதுரையின் வரவேற்புரையை அடுத்து சமயத்தலைவர்களின் உரைகள் ஆரம்பமாகும்.

(நடுப் பக்கம் பார்க்க)

"சகோதர சமயங்களின் நல்லுறவு மாநாடு"

''இந்துசமயம் ஆதியானது. காலத்தை வென்றது. தோன்றிய காலம், தோற்றுவித்தோர் நாமம் தெரியாத தொன்மைவாய்ந்தது. அகில உலகெங்கும் ஒருகால் பரவியிருந்ததற்கான ஆதாரங்கள் சிலாசாசனங்கள், கல்வெட்டுக்கள், புராதன ஆலயங்களின் இடிபாடுகள், நில, கடல் ஆய்வாளர்களுடைய ஆராய்ச்சிகள் முதலியன காலத்திற்குக் காலம் கிடைத்துவருவதன் மூலம் இந்துசமயத்தின் பெருமை கண்டு முழு உலகும் வியந்து நிற்கின்றது. மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் இரண்டிலும் உயர்ந்து நிற்கும் சிறப்பு இந்து சமயத்திற்கு உண்டு.''

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல் இந்துசமய, இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை இன்று ஆரம்பமாகும் இந்துமகாநாட்டை யொட்டி விடுத்திருக்கும் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தமதுசெய்தியில் மேலும்

(8ம் பக்கம் பார்க்க)



"அமைச்சர் தொண்டமான் ஒரு செயல் வீரர்!"

பட்டிருப்பு எம். பி. புகழ்மாலை

(மட்டக்களப்பு நிருபர்கள் இரா. உதயகுமார்– இரா. துரைரத்தினம்)

''அமைச்சர் தொண்டமான், தாம் ஒரு அமைச்சர் என்பதை மறந்து தமிழினத்தின் உரிமைகள் மறுக்கப்படும் போதும், அநீதிகள் இழைக்கப்படும் போதும், குரல் கொடுக்கும் செயல் வீரர்''

இவ்வாறு நேற்று மட்டிருப்புத் தொகுதிக்கு, பட்டிருப்பு எம். பி. திரு. பூ கணேசலிங்கத்தின் அழைப்பின் பேரில், உத்தியோகபூர்வவிஜய மொன்றினை மேற்கொண்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.சௌ.தொண்டமான் வரவேற்புப்பேசிய பட்டிருப்பு எம். பி. திரு. பூ கணேசலிங்கம் புகழாரம் சூட்டினர்.

அமைச்சர் சம்பிரதாயபூர்வமாக, ஒந்தாய்ச்சி மடத்தில் நிறுவப்பட்டுள்ள தும்பு ஆலையைத் திறந்து வைத்ததுடன், பல்வேறு கைத்தொழில் நிலையங்களுக்கும் விஜயம் செய்தார்.

அமைச்சரை வரவேற்க மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி, அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் திருவாளர்கள், அல்பிறட், சிவரெத்தினம், வே. தம்பிராசா, அம்பாறை மாவட்ட சபை உறுப்பினர் திரு. ஏ. வேல்முருகு உட்பட பெருந்தொகையான கூட்டணிப் பிரமுகர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

திரு. பூ கணேசலிங்கம் தொடந்து உரையாற்றுகையில் ''அமைச்சர் தொண்டமான் மற்றைய அமைச்சர்களைப்போன்றவர் அல்ல. வாக்குறுதிகளை செயல்படுத்தும் வீரர். மட்டக்களப்புச் சரித்திரத்தில் அதுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு வீரலாற்றில் ஒரு அமைச்சரை அழைப்பதும் அவரை வரவேற்பதும் அமைச்சர் தொண்டமானையேசாரும். தமிழினத்துக்கு இன்னல் நேர்ந்த வேளையில் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியத்துக்கு அமைய

(8ம் பக்கம் பார்க்க)

★ அழகி மாலினி மர்ம மரணம்: நீண்டநாள் உறவு இருந்ததாக விற்பனை முகாமையாளர் சாட்சியம்

சீவியம் வெறுத்துவிட்டதாக சம்பவதினஇரவு கூறினராம்

(யாழ்ப்பாணம்)

''காலஞ்சென்ற மாலினி மகேந்திரனை, எனக்கு இரண்டு வருடங்களாகத் தெரியும். இவரது சுண்டிக்குளி வீட்டிலும், ஆனையிறவு விடுதியிலும் பல நாட்கள் நான் தங்கியிருக்கின்றேன். நானும் திருமதி மாலினி மகேந்திரனும் கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளோம். ஒருசந்தர்ப்பத்தில் கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்றுசில நாட்களை உல்லாசமாகக்கழித்துள்ளோம் திரு. மகேந்திரன் இல்லாத நாட்களில்கூட நான், திருமதி மாலினி மகேந்திரனுடன் அவரது வீட்டில் நாட்களைக் கழித்துள்ளேன்.''

இவ்வாறு அழகி மாலினி மகேந்திரனின் 26வயது]மரண விசாரணையில் பிரபலவர்த்தக நிறுவனமொன்றின் பிராந்திய விற்பனை முகாமையாளர் செல்லத்துரை சிவகுமாரன் (வயது 31 நேற்றுச் சாட்சியமளிக்கையில் கூறினர்.

மரண விசாரணை, யாழ். நீதிமன்றத்தில் யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

அழகி மாலினி, கடந்த 15ம் திகதி, மர்மமான முறையில் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதியொன்றில் காலமானதும், இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி விசாரணை நடத்தியதும், பின்னர் யாழ். நீதவான்ஞல் விசாரணை இடை நிறுத்தப்பட்டு, நேற்று முன்தினம் யாழ். நீதவான்திரு. ரி.ஜோகநாதன் விசாரணை நடத்த ஆரம்பித்ததும்தெரிந்ததே

நேற்று முன்தினம்; இறந்தவரின் கணவர் திரு. மகேந்திரன் சாட்சியமளித்திருந்தார். நேற்று இறந்தவரின் வீட்டில் அடிக்கடி தங்கியதாகக் கூறப்பட்ட விற்பனை முகாமையாளர் செ. சிவகுமாரன் சாட்சியமளித்தார்.

சாட்சியத்தில் சிவகுமாரன் மேலும் கூறியதாவது:

2 வருடமாகத் தெரியும்

''இறந்தவரையும், அவரது கணவரையும் எனக்கு இரண்டு வருடங்களாகத் தெரியும்.

''ஒருநாள் திருகோணமலையிலிருந்து யாழ் நோக்கிவந்து கொண்டிருந்தபோது கிளிநொச்சியில் தங்குவதற்கு இடம் தேடினேன். அங்கு இடம் கிடைக்காததினால்

(8ம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு, சுண்டிக்குளி: யாழ். நீதவான் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் இன்று ஆனையிறவு வீட்டையும், சுண்டிக்குளியில், கொழும்புத்துறை வீதியிலுள்ள வீட்டையும் பார்வையிடுவார்.

பரந்தன் புகையிரத நிலைய அதிபரின்வாக்குமூலமும்இன்று பதிவு செய்யப்படும் எனத் தெரியவருகிறது.

அழகி மாலினி ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதி ஒன்றில்தான் மரணமானார். இவரது சொந்த இருப்பிடம் சுண்டிக்குளி ஆகும்.

புதுவருட தினத்தன்று மாலினியின் கணவர் மகேந்திரன் பரந்தன் புகையிரத நிலையத்திலிருந்துதான் தனிப்பட்ட விஷயமாக கொழும்பு பயணமானார்.

ஆயிரம் கி. சே. அலுவலர் பிரிவுகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் ஆயிரம் கிராம சேவை அலுவலர் பிரிவுகளையும், 25 உதவி அரசஅதிபர் பிரிவுகளையும்விரைவில் அமைக்கத்திட்டங்கள்வகுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் திரு. அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம் தெரிவித்தார்.

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையிடம் கோரப்படவுள்ளதாகவும் அவர் கூறினர். (வெ)

மணிவாக்கு

நாம் அறியாவண்ணம் எங்ஙனமெல்லாமோ நம் முடைய வாழ்க்கையினை உருவாக்கிக்கொண்டு செல்லு கின்ற ஏதோ ஒரு பேராற்றல் உளது.

—ஷேக்ஸ்பியர்

நமது நோக்கு

சமயப் பொறுமை

சமயப் பொறுமையே சிறந்த கொள்கையென்று உணர்ந்த இந்திய விடுதலை வீரர்கள், மகாத்மாகாந்தி யின் தலைமையிலும், பண்டி தர் நேருவின் ஆதரவுட னும் சுதந்திர இந்தியாவில் ஒருமத சார்பற்ற அரசியல மைப்பை உருவாக்கினர்.

பெரும்பான்மை இந்துக் கள் வாழும் பாரதநாடு இந்து சமயத்தில் பிறப்பிட மென்பது தெரியாதார் இலர். இருந்தும் பலமதத் தவர்கள் வாழும் இப் புண் ணிய பூமியில் இந்த மதத் தின் சிறப்பான கொள்கை மக்கள் வாழ்விற்கு உகந்த தெனக் கருதி இந்திய அரசு மதசார்பற்ற அர சென்று முடிவு கட்டிவிட் டது. இதன்பெருமை இலகு வில் புரியக்கூடியதல்ல.

இந்து மதத்தின் தீவிர வாதிகள் என்று சண்டை போடும் ஒரு கோஷ்டியினர் மகாத்மாகாந்தியைச் சுட் டுக் கொன்றதுடன் நின்று விடாமல் சமயப் போட்டி யையும் பூசல்களையும் காலத் துக்குக்காலம் கிளப்பி வரு கின்றனர். ஆனால் அவ்வித கிளர்ச்சிகள் ஈற்றில் ஒழி கடையே என்று கொள்ள வரலாறு இடமளிக்கிறது.

நாகரிக மனிதன் தோன் றிய காலத்தில் உபநிடதங் களை உலகுக்களித்தவர்கள் மனிதரா? தெய்வமா?என்ற வாதம் நிகழ்ந்தது இன்றும் வாதத்துக்குரியது.

இன்றைய விஞ்ஞான வேகம் நிறைந்த காலத்தில் அவை தெய்வீகமனிதரால் தொகுக்கப்பட்டவை என் பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கிறது.

இந்தப் பழமையும்,பெரு மையும் வாய்ந்த இந்துசம யம் ஒரு சிறந்த நாகரிக சமுதாயம் வாழ்ந்த காலத் தில் தோன்றியிருக்க வேண்டுமென்பது தெளிவு.

காலப் போக்கில் உலக சரித்திரத்திற்கமைய ஏற் றமும், தாழ்வும் சமுதாயங் கண்ட அனுபவமாகும். புத்தபிரான், மாகத்மா காந்தி போன்ற தலைவர் கள் அவதரித்த நாடு பின் தங்கியிருந்தது வரலாறு.

எங்கள் காலத்தில் சுதந் திர இந்தியாவை உருவாக் கிய மகாத்மாகாந்தியின் சீவிய சரித்திரத்தைப் புரிந் தவர்கள், அவர்ஒரு தெய் வீக மனிதன் என்றும் இந்து சமய சீலம் ஒருங்கே அமைந்த திருவுருவம் என் றும் அறியும் வாய்ப்புப் பெற்றவர்கள்.

இன்று கொழும்பில் ஆரம்பமாகும் உலக இந்து மாநாடு, இன்றைய மனித னுக்கு இந்து சமயம் கற்பிக் கும் சிறந்த பாடத்தை எடுத்து விளக்குவதில் வெற்றி பெற வேண்டு மென விரும்புகிறோம். பரந்த நோக்கின் பண்பும் பாரம் பரியமும்.

இந்த மநாட்டின் குறை நிறைகளில் அனுவசிய ஆராய்ச்சி நடத்துபவர்கள் விருந்தாளிகளாய்வீட்டுக்கு போய்விருந்துண்ணத்தவறி வைபவமுடிவில் வீசப்பட்ட எச்சில் இலைகளில் உள்ள மிஞ்சிய உணவுக்கு சண்டை யிடும் காட்சியை நினைவு படுத்துகின்றனர்.

அரசியல் கலவாத அலு வல்கள் இன்று எங்கும் உண்டா? நடைபெறும் கைங்கரியத்தை நிறை வேற்ற உதவி. அதனால் நற்பலன் சிறிதேனும் உண் டாகில் அதற்கு கை கொடுத்து உதவலாம்; முடி யாதுபோனால் கை கட்டிக் கொண்டிருக்கலாம்; கை கட்டுதல்உசிதம்: மனத்தை அடக்க முடியாதவர் பக் கத்தில் கல்லிருந்தால் அதனை எறிந்து பழக ஆசைப்படுவர். குறைகள் எக்காரணம் பற்றியோ, எவ்வளவு ஒழுங்குஅமைப்பு குன்றிய முறையிலோ அது நடைபெற்றாலும் அது நடந்து முடியட்டுமேன்? என்ன ஆபத்து வரப் போகின்றதென்று அந்தரப் பட வேண்டியதில்லை. மொழியும், மதமும் வாளை யும் பேனாவையும் தூண்டி விடும் தீப்பொறிகள்!

இதன் பொட்டுக் கேடுகளை உலகறிய வேண்டு மென்ற உன்னத நோக் சால் உந்தப்படும் ''பெரி யோர்களை'' எடைபோட இந்த நாட்டில் ஏன் எந்த நாட்டிலும்ஆட்கள் நிறைய உண்டு. எனவே ஜாக்கி ரதை.

எங்கள் நாட்டில் சாதிச் சண்டை, இனக்கலவரம், சமயப் பூசல் மருந்துக்கும் இல்லையென்று எவரும் சொல்ல முற்பட்டால் அவருடைய நோய் என்ன என்பது தெரிந்ததே.

அதே சமயம் இவ்வித குறைகள் நிறைந்திருந்தால் இந்த மாநாடு நன்முய் நடைபெற்றால் நிலைமையில் இம்மியளவாவது நன்மை உண்டென்று கொள்ளும் தெருள் நோக்கம் உடைய வர்கள் இந்துக்கள். 'மண் ணில் நல்ல வண்ணம் வாழ'த் தெரிய வேண்டிய வர்கள்.

பரந்த நோக்கமுடைய இந்து (சைவ) சமயம் ஒவ் வொரு சமயத்திலும் அருள் புரியும் பரம் பொருள் ஒன்று என்று கொள்கின் றது.

இதனை நன்முக விளக்கி ஏனைய சமயத்தவரின் மதிப் பைச் சம்பாதிப்பதும் இந்து சமயத்தின் இன்றிய மையாததாகக் கொள்ளப் படும். ஆலய வழிபாட்டின் தத்துவம் இன்றைய இளை ஞர்களுக்கு இக்கால வாழ் விற்கு அமைந்த முறையில் தெளிவுபடுத்துவதும் மாநாட்டின் முக்கியசாதனை யாகவிருத்தல் வேண்டும்.

இந்த நாட்டில் மக்கள் சமுதாயத்தை வளம்படுத் திய சைவக்கோவில்கள், புராதன ஸ்தலங்கள் சீர் கெட்டிருக்கும் நிலையை ஒழிக்க ஒரு தெளிவான பரந்ததிட்டம் உருவாக வழிபிறக்குமானால் அதுவும் ஒரு அளப்பரிய நன்மையா கும்.

மாநாட்டில் இடம்பெ றும் கருத்துரைகள் சாதா ரண மக்களின் கவனத்துக் குக் கிட்டவும், வருகை தந்த பெரியோர்கள் சம யத்தின் உயிர் நிலையங்க ளான புராதன ஸ்தலங்க ளைத் தரிசித்து சிறப்புரை வழங்கவும் ஏற்பாடுகள் மிகஅவசியம்.

சமயப்பணிகள் பாமர மக்களை எட்டவேண்டும்!

நமது மதம் தொன்மை யானது. அதனை யாராலும் அழிக்க முடியாது என்பது சிலருடைய வாதம். எந்த மதத்தையோ எந்தச் சமூகத் தையோ எந்தமொழியையோ முற்றுக அழித்ததாகச் சரித் திர வரலாறு இல்லை. காலத் திற்குக்காலம் அரசுகள் அழிந் துள்ளன; கடல் கோளினால் தேசங்கள் அழிந்துள்ளன. ஆனால் சமயங்கள் அழிந்துவிட வில்லை.

நமது மக்கள் நமது சம யத்தை அறிந்து அதன்படி ஒழுகச் செய்ய வேண்டியது நமது இந்துக்களுடைய கட மையாகும். சமயம் தோன் றிய காலந்தொட்டு சமயத்தை அறிந்தவர்கள் அறியாதவர்க ளுக்கு எடுத்துச் சொல்வது ஒரு தெய்வப் பணியாகக் கரு தப்பட்டு வந்துள்ளது.

கோயில்களும், ஆச்சிரமங்க ளும், சங்கங்களும் கடவுளை அநுபவிக்கும் இடங் களாக மாத்திரம் அன்றி சமய உண்மைகளை அறிவிக்கும் நிலை யங்களாகவும் விளங்கி வந் துள்ளன. ஆகவே சமய ஒழுக் கம் மனிதருடைய சீரிய வாழ் வுக்கு அவசியம் என்பதை நமது முன்னோர் உணர்ந் திருந்தனர்.

கல்வி அறிவோ, ஆத்மீக அறிவோ, தம்மை நாடி வந் தோருக்கு மாத்திரம் உபதே சிக்கப்பட்டு வந்த காலம் ஒன் றிருந்தது. இன்றைய நிலையில் அது மாத்திரம் பொருந்தாது. கோயில்களும், ஆச்சிரமங்க ளும். சமயச் சங்கங்களும் பொது மக்களை நாடிச்செல்ல வேண்டிய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம். ஆகவேதான நாம் பாமர மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யத் தவ றியமையினால் அவர்களால் விலங்கு நிலையினின்றுயர்ந்து கொள்ள முடியவில்லை. இச் சந்தர்ப்பத்தை மற்றையமதத் தவர்கள் பயன்படுத்துவதற்கு நாம் காரணர்களாக இருந் திருக்கின்றோம்.

கோயில் பணிகளும், ஆச் சிரமப்பணிகளும், சமய சங் கப்பணிகளும நகரப் புறங்களி லும் அதுவும் கற்றோர் மத்தி யிலேயே நடைபெற்றிருக்கின் றன. இதனால் பாமர மக்கள் சமய அநுட்டானங்களில் பின் தள்ளப்பட்டுவிட்டனர். இந்து மதத்தைத் தவிர்ந்த மற்றைய மதங்களுக்கு குருமார்களும் பிரச்சாரகர்களும் பெருந் தொகையாக இருக்கின்றார் கள். நமது இந்து மதத்தில் அந்த அளவிற்கு சமயப்பணி விரிவடைந்ததாகத் தெரிய வில்லை.

நமது சமயப்பணி பாமரமக் களிடையே எட்டும் அளவிற்கு விரிவடையவேண்டும். அதற்கு ஒரு வழி உண்டு. முப்பது முப் பத்தைந்து குடும்பங்கள் கொண்ட சத்சங்க வட்டங் கள் தோற்றுவிக்கப்படவேண் டும். அதாவது ஒருவர் ஒரு நாளைக்குச் சூழ உள்ளவர்க ளைத் தமது வீட்டிற்கு வழி பாட்டிற்கு என அழைக்க வேண்டும். கோயிலுக்கோ பொதுக் கூட்டங்களுக்கோ சமூகம் கொடுக்காதவர்களும் வீட்டு வழிபாட்டிற்கு மகிழ்ச் சியுடன் வருகின்றனர். அவர் கள் வந்துதான் ஆக வேண் டும். காரணம்: அழைத்த வரை அவர்களுக்கும் ஏதோ ஒரு தேவைக்காக அழைக்க வேண்டி ஏற்படும் அல்லவா?

ஒரு படத்தை வைத்து இல ையில் பெறக்கூடிய பூக்களால் அலங்காரம்செய்யவேண்டும். படத்தின் முன் ஒரு குத்து விளக்கை ஏற்ற வேண்டும். ஒரு சட்டத்தில் அர்ச்சனைக் கென்று சில பூக்களைத் தேடி வைத்தல் வேண்டும். பூ கிடைக்காதபோது பச்சிலைக ளையே பயன்படுத்தலாம். படத்திற்குத் தீபாராதனை செய்தபின் தமிழில் அர்ச்சனை செய்யலாம். ஒருவர் அர்ச் சனைப் பாடலை வாசிக்க வீட் டுக்குரியவர் பூக்களை அர்ச்சிக் கலாம். அர்ச்சனை முடிவில் தீபாராதனை செய்து விபூதிப் பிரசாதம் வழங்கலாம்.

அன்பினால் சாதிக்கலாம்

வாரம் ஒருமுறை நாம் எல் லாரும் வழிபாட்டை முன் னிட்டுக்கூட்ட வேண்டிய அவ சியத்தை எடுத்துரைக்கலாம். பெரியபுராண வசனத்தில் ஒரு நாயனருடைய சரிதத்தை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்கலாம். வந்தவர்களுக்குள் ஐந்து பேரை சமய அனுட்டானமும் நேர்மை ஒழுக்கமும் உள்ளவ ராகத் தெரிவு செய்தல்வேண் டும். இவர்கள் பஞ்சாயத் தார் என்று அழைக்கப்படுவர். இந்த வட்டத்தைச் சேர்ந்த வர்களில் யாராவது பொலிசை நாடியோ கோர்ட்டை நாடி யோ செல்ல வேண்டிய சந் தர்ப்பங்கள் ஏற்படுமானால் அவர்களை செல்லவிடாது பிணக்குகளைத் தீர்த்து வைப் பது இப்பஞ்சாயத்தாரின் முக் கிய கடமையாகும். பரஸ்பரம் எல்லாருமே பரநலம் உள்ள வர்களாக வாழச் செய்தல் முக்கிய நோக்கமாகும். முப் பது குடும்பங்களில் நாலு குடும்பங்கள் குடிபோதைக்கு அடிமைப்பட்ட குடும்பங்களா யிருக்கக்கூடும். மற்றைய இரு

நா. முத்தையா

பத்தாறு குடும்பத் தலைவரும் ஓர்நாளைக்கு காலையில் அந்த நாலு முப்பத்தினருடையவும் வீட்டிற்குச்சென்று தங்களுக் காக அவர்கள் குடியை விடு மாறு புத்திமதி கூறவேண்டும். பலமுறை அவர்களை அன்போ டும் அணுகினால் அவர்கள் தவ றாது நம்வழிக்கு வந்துசேர்வர். ஒரு குடும்பத்தில் நாலுபெண் கள் உரிய வயது வந்ததும் வாழ்க்கைப்படாமல் இருக்கின் றார்கள் என்று வைத்துக் கொள்வோம். மற்றைய இருபத்தொன்பது குடும்பத்தினரும் ஒன்று சேர்ந்து இவர்களை வாழவைப் பது எப்படி என்பதைச் சிந் திக்கலாம் அல்லவா?

இளைஞர் பிரச்னை

சில இளைஞர்கள் தீய பழக் கங்களுக்கு அடிமையாகி சீர ழிந்து போவது சர்வசாதா ரணமாகிவிட்டது. அவர்களை அணுகி அத்தீய பழக்கங்களி லிருந்து அவர்களை விடுவித்தற் கான முயற்சிகளைச் செய்ய லாம். சில இளைஞர்கள் வேலை இல்லாது கஷ்டப்படுவது உண்டு. அத்தகையவர்களுக்கு எல்லாரும் சேர்ந்தால் ஏதா வது ஒரு மார்க்கத்தைக் கண்டு பிடிக்கலாம். இன் னும் சில இளைஞர்கள் ஊர் சுற்றிகளாகக் காணப்படுவார் கள். அவர்களை அணுகி நேரத் தின் பெறுமதியை விளக்கிப் பயனுள்ள கருமங்களில் அவர் களை ஈடுபடச் செய்யலாம்.

வாரம் ஒரு முறை ஒவ்வொரு வர் இல்லத்தில் இத்தகைய சத்சங்கக் கூட்டம் நடை பெறும். இதில் பணம் எவ் விதத்திலும் சம்பந்தப்படுவ தில்லை. பதவிப் போட்டிகள் இல்லை.

''எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறி யேன் பராபரமே''

என்ற தாயுமானரின் வாக் கைச் சாதனைப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இத னால் உயர்வு தாழ்வு நீங்குகி றது. வாரம் ஒருமுறையாவது ஒருவரோடொருவர் கலந் துரையாடுவதால் பொறுமை தப்பான அபிப்பிராயங்களிக்கு இடமில்லாமல் போகின்றது. சமயம் வேறு சமூகம் வேறு எனறில்லாமல், சமயம் வேறு வாழ்வு வேறு என்றில்லாமல் சமயமே வாழ்வு; வாழ்வே சமயம் என்ற நிலைக்கு மக்களை உயர்த்துகின்றது. தன்னலந் தேய்ந்து பரநலம் வளருகின் றது. தனக்காக மாத்திரம் வாழாமல் பிறருக்காகவும்நாம் வாழவேண்டும் என்ற எண் ணத்தை உண்டாக்குகின்றது.

சமூகத்தில் ஏற்படும் நன்மை தீமைகளில் தாமா கவே முன்சென்று பங்குபற்றி தமது பங்கினை அளிக்கும் மனோபாவத்தை வளர்க்கின் றது ஓரளவு பணம்படைத் தவர்கள் வறியவர்களுடைய வாழ்க்கைக்கும், அறிவாளி கள் அறிவு குறைந்தவர்களுக் கும் உதவி செய்யச் சந்தர்ப் பங்களை அளிக்கின்றது. இத் தகைய ஒற்றுமையும் ஒரு வரை ஒருவர் புரிந்துகொள் ளும் வாய்ப்பும் ஏற்படும் போது அவ்வட்டத்தைச்சேர்ந் தவர்கள் எல்லாருமே மகிழ் வோடு வாழும் வழிதானகவே ஏற்பட்டுவிடுகின்றது. வழி தவ றிச்செல்வோரை நல்லவழிக்கு அழைத்துச் செல்லும் வழி காட்டியாகவும் அமைந்துவிடு கின்றது

சத்சங்க வட்டங்கள்

ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய சத்சங்க வட்டங் கள் பல தோன்றவேண்டும். ஒவ்வொரு குடும்பமும் ஏதா வது ஒரு சத்சங்க வட்டத்தி லாவது சேர்ந்திருக்கவேண் டும். கிராமோதய சபைகளி னால் சாதிக்கமுடியாத பல கரு மங்களை இவற்றினால் சாதித்து விடமுடியும். இச்சத்சங்கவட் டங்கள் மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டிகளாக அமையும். எங்கும் நீக்கமற நிறைந்திருக் கும் பரம்பொருளை எல்லா ருமே அனுபவிக்கத்தக்கதான ஒரு வழியினைக்காட்டுவதற்கு இத்தகைய சத்சங்கவட்டங் களினால்தான் முடியும்.

உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் உலகப் பிரதிநிதிகள் யாவரும் இச்செய்தியை எடுத்துச் சென்று தமது தேசங்களிலும் இத்தகைய சத்சங்க வட்டங் களை ஏற்படுத்திச் சமயசமூகப் பணி செய்வார்களேயானால் அகில உலக இந்து மாநாட்டின் முக்கிய பயனை அகில உலகத் திலுமுள்ள இந்துக்கள் மாத்தி ரம் அல்ல மற்றைய சமயசமூ கத்தவர்களும் அனுபவிக்க வழிகாட்டியவர்களாவார்கள். இதனைச் செயல்படுத்த ஒவ் வொருவரும் முயன்றால் மிக இலகுவில் பயனை அடைய லாம். இதற்குப் பண உத வியோ அரச உதவியோ எது வும் தேவையில்லை.

உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ஆறுமாத அடிப் படை பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியதேசிய தொழில் பயிற்சிசபையின் கைவினைப்பயிலுநர்கள் மதிய போசன விருந்தொன்றை விரி வுரையாளர்களுக்கு வழங்கி னார்கள்.

இவ்விருந்துபசாரத்தில் கல் லூரி உப அதிபர் திரு. வை. பாக்கியநாதன் உரையாற்று கையில் ''தேசிய தொழில் பயிற்சிசபையின் கைவினை பயி லுநர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ள மாலைநேர பயிற்சிநெறிக்கு அனுமதி வழங்க ஆவனசெய்வதாக உறுதியளித்தார்.

மற்றும்பல விரிவுரையாளர் களும் இவ்விருந்துபசாரத்தில் உரை நிகழ்த்தினர்.

போக்லண்ட் தீவுகள் பிரச்னை

புதியயோசனைகளுடன் அமைச்சர் ஹெய்க் வாஷிங்டன் திரும்பினார்

லண்டன், ஏப். 20

போக்லண்ட்தீவுகள் பிரச்னையை தீர்த்துவைப்பதற்காக புதிய யோசனைகளுடன் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர்ஹெய்க் வாஷிங்டன் சென்றுள்ளார்.

பிரிட்டனுக்கும், ஆர்ஜென்டீனாவுக்குமிடையே ஏற்படவிருந்த யுத்தத்தை தவிர்ப்பதற்கான சமரசத்திட்டமும் இந்த யோசனைகளில் அடங்கியுள்ளதாக திரு. ஹெய்க் தெரிவித்தார்.

இந்த யோசனைகளின்மூலம் போக்லண்ட்தீவுகளின் பிரச்னையை சமாசமாகத்தீர்த்து வைக்கலாமென்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

போக்லண்ட்தீவுகள் நெருக்கடி குறித்து ஐ. நா. பொது செயலாளர் ஆர்ஜென்டீனா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுக்குழுக்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஐ. நா. பொதுச்செயலாளர் போக்லண்ட்தீவுகள் பிரச்னையில் சமரசத்திட்டமொன்றை ஏற்படுத்தலாமென்றும் ஐ. நா. உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்பிரச்னைகுறித்து ஆராய்வதற்காக பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மாகரட்தட்சர் விசேட அமைச்சரவை கூட்டமொன்றை இன்று கூட்டவுள்ளார்.

போக்லண்ட்தீவுகளை பிரிட்டன், ஆர்ஜென்டீனா, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளின் நேரடி மேற்பார்வையில்விடவேண்டுமென்றும், அங்கிருந்து ஆர்ஜென்டீனா துருப்புக்கள் வாபஸ்பெறப்படவேண்டுமென்றும், அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் கடற்படையும் போக்லண்ட்தீவுகளிலிருந்து வாபஸாகுமென்றும் திரு. ஹெய்க் தமது சமரச யோசனைகளில் தெரிவித்துள்ளார்.

இப்புதிய யோசனைகள் பிரிட்டனுடன் தொடர்புகொண்டே தயாரிக்கப்பட்டதாகவும் திரு. ஹெய்க் தெரிவித்தார்.

போக்லண்ட்தீவுகளைபிரிட்டனிடமிருந்து இம்மாதம் 2ம் திகதி ஆர்ஜென்டீனா கைப்பற்றியிருந்தது தெரிந்ததே. (வெ)

நினைவுதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகம், அமரர் கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் நினைவுதினக்கூட்டத்தை இம்மாதம் 24ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழீழ விடுதலை அணியினர் நடாத்தவுள்ளனர்.

இக் கூட்டத்தில் தமிழ்ழீழ விடுதலை அணியைச்சேர்ந்த இளைஞர்களும், சமயப் பெரியார்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதியின் கார்மீது:

மோட்டார்சைக்கிளில் வந்தோர் மோதினர்

(கொழும்பு

நுவரேலியாவில், சித்திரை மாதப் பருவகாலக் கொண்டாட்டங்களில் கலந்துவிட்டு கொழும்பு திரும்பிக்கொண்டிருந்த ஜனாதிபதியின் உத்தியோகபூர்வக் காரின் மீது பாதையின் வளைவு ஒன்றுக்கருகில் இரு மோட்டார் சைக்கிளோட்டிகள் மோதிக்கொண்டனர்.

ஜனாதிபதியின் காருக்கு இதனால் ஏற்பட்டசேதம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லையாயினும், மோதுண்ட இரு மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கும் காயமேற்பட்டதனால் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இவ்விபத்தில், காயமடைந்த இரு மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும் குருணா

(6ம் பக்கம் பார்க்க)

"செல்வா-சிறிமா பேச்சுவார்த்தையில்

குடியேற்றத்திட்டம்பற்றியே முக்கியமாகப்பேசப்பட்டது"

தாவடி கூட்டத்தில் 'அமிர்'

(கோண்டாவில்)

"விடுதலை இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று இருப்பவனுக்குத்தான் எப்பொழுது வேகமாகச் செல்ல வேண்டும், எப்பொழுது நேர் வழியில் போகவேண்டும், எப்பொழுது திரும்பிப்போக வேண்டுமென்பது தெரியும். அதனை விடுத்து வெளியிலிருக்கும் ஒருவர் கட்டளையிட்டுவிட்டார் என்பதற்காக நடவடிக்கை எடுத்தால் அதனால்ஏற்படும் பிரதிபலிப்புகளையும் ஏற்கத்தயாராகஇருக்கவேண்டும். நாம் கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் உரையாற்றும் பொழுது கூட, தெட்டத்தெளிவாக, எமது மக்கள் அளித்த ஆணையிலிருந்தும் இம்மியளவும் நகரமாட்டோம் தமிழ் ஈழம் பெறுவதே எமது முழுமையான நோக்கு என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறினோம்".

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ அமிர்தலிங்கம் தாவடியில் நடந்த கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

தாவடி மக்களினால் கிராமோதய சபைத் தலைவராக திரு. இரா. சந்திரசேகரன் தெரிவு செய்யப்பட்டதையிட்டு தாவடிமத்தியசனசமூக நிலைய திறந்தவெளியரங்கில் தலைவர் திரு. கே. கே. ஜெகநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: அமைச்சர்களின் கையில் குவிந்து கிடந்தநிர்வாகத்தைப் பரவலாக்கவேண்டுமென்று கடந்தஐம்பதுஆண்டு காலமாக போராடி வருகின்றோம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சொக்ஸி ஆணைக்குழு நிர்வாகத்தைப் பரவலாக்க வேண்டுமென்று சிபார்சு செய்தது. ஆனால்அன்றைய அரசியல் தலைவர்களும், புத்தபிக்குமார்களும் தமிழ்மக்கள் தமது இழந்த உரிமையை இதன்மூலம் நிலைநாட்டிக் கொள்வார்கள் என்று பயந்து அதனை நடைமுறைப்படுத்த விடாது தடைசெய்துவிட்டார்கள்.

பண்டா-செல்வா ஒப்பந்தம்

"1957ல் மீண்டும் பண்டா–செல்வா ஒப்பந்தத்தின் மூலம் பிரதேசசபை அமைப்பு கொண்டுவரப்பட்டது. அப்பொழுது இன்றைய ஜனாதிபதியும், பிக்குகளுமாககண்டிக்கு பாதயாத்திரை சென்று நாட்டை இரண்டாகப்பிரித்து பண்டா தமிழ்மக்களுக்குக் கொடுத்துவிட்டார் என்று பிரசாரம் செய்தார்கள். இதன் காரணமாக அவ் ஒப்பந்தம் 1958ல் கிழித்தெறியப்பட்டது.

முவர் ஆணைக்குழு

"மீண்டும் 1960ல் சேரசிங்கா, மகத்திலா, சூரியகுமாரா ஆகிய மூவர்கொண்ட ஓர்ஆணைக்குழு நியமிக்கப்பட்டு பிரதேசசபை பற்றி ஆராயப்பட்டது. தில் சேரசிங்கா மட்டும் தனது அறிக்கையில் மாவட்டஅடிப்படையில் அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலம்நாட்டைப் பிரித்துவிடுவார்கள். ஆகையினால் இதனை உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு அடிப்படையில் பரவலாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். இதனை மையமாகக்கொண்டு புத்தபிக்குகளும், ஜெயதிலகா போன்றவர்களும் எதிர்ப்புநடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் காரணமாக 1961ம் ஆண்டு மீண்டும் இவ்வறிக்கையும் கைவிடப்பட்டது.

செல்வா-டட்லி ஒப்பந்தம்

"1965ம் ஆண்டு மீண்டும் செல்வா–டட்லி ஒப்பந்தம் மாவட்டசபையை மையமாக வைத்துஎழுதப்பட்டது இதன் அடிப்படையில் அன்றைய உள்ளூராட்கி அமைச்சராக திரு. எம். திருச்செல்வம்பதவியேற்று மாவட்டசபை சட்டத்தை ஒரு வெள்ளையறிக்கை மூலம் தயாரித்தார். இந்நிலையில் சிங்களமக்கள் மத்தியில் ஏற்பட்ட கிளர்ச்சியைத் தொடர்ந்து 1968ல் அதுவும் கிழித்தெறியப்பட்டது. டட்லி செல்வாவுக்கு தனதுகட்சியின் உள்ளேயே இதற்கு எதிர்ப்பு இருக்கின்றது என்று கடிதமும் எழுதினார்.

போராட்டம் நடத்தினோம்

நாம் மாவட்டசபை, மாகாணசபை, பிரதேசசபையென்றேதொடர்ந்துபோராட்டம் நடாத்தி வந்துள்ளோம். இதற்காக நாம் ஒவ்வொருகட்டத்திலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏதோ ஒரு காரணத்தினால் கிழித்தெறியப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனால் இன்று உலக நாடுகள் தமிழ் மக்களின் பிரச்னையில் கொண்டுள்ள அக்கறை காரணமாக அரசுக்கு கொடுத்த நெருக்கடியைத் தொடர்ந்தே இன்றைய மாவட்ட அபிவிருத்திச்சபை உடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனை கூறும் சபை

1977ம் ஆண்டு மாவட்ட அமைச்சருக்கு ஆலோசனை கூறும் சபையாக அமைக்கவே ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டு இருந்தது ஆனால் சர்வதேச நாட்டின் நெருக்கடியே தமிழ்மக்களின் கோரிக்கைகளையும் அரசு செவிசாய்க்கின்றது என்பதைக் காட்ட குடியேற்றம், அதிகாரம் பரவலாக்கல் என்ற கோரிக்கைகளை செவிமடுத்துள்ளது. இன்றைய மாவட்டசபைகூட நாம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தடைப்பட்டுவந்த ஒரு முயற்சியாகும் இது 1980ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைச்சட்டம் நிறைவேற்றப்பட்டமையினால் வெற்றி பெற்றுள்ளது.

மாவட்ட சபைகள்

மாவட்ட சபைகள் இன்னும் சரியான முறையில் தொழிற்ப முடியாத நிலையில் காணப்படுகின்றன. இக்சபைக்கு இன்னும் சட்ட ரீதியாக பூரண அதிகாரம் வழங்கப்படவில்லை. கடந்த 5ம் திகதி நாம் ஜனாதிபதியுடன் இறுதியாக நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து குறிப்பிட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அடுத்தமாதம் 19ம் திகதிக்கு முன்னர் வழங்கி அதுபற்றி அறிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மாவட்ட அபிவிருத்தி சபைமூலம் காணி, விவசாயம், கூட்டுறவு. சிறுகைத் தொழில், கலாச்சாரம் போன்ற 15 விடயங்கள் அதிகாரபூர்வமாக கொண்டு வரப்படவுள்ளன.

அமைகின்ற தமிழ் ஈழம்

"அமைகின்ற 'தமிழ் ஈழம்' அந்தரத்திலோ, அன்றி ஆகாயத்திலோ நிற்க முடியாது. மண்ணை நாம் குடியேற்றங்கள் மூலம் இழந்து தமிழ் ஈழத்தை நிலை நாட்டமுடியாது. 1977 மார்ச் 13ல் செல்வா சிறிமாவுடன் இறுதியாக நடாத்திய பேச்சு வார்த்தையிலும் கூட குடியேற்றத் திட்டம் பற்றியே முக்கியமாகப் பேசப்பட்டது. 1957க்கும் 1977க்கும் இடையில் தந்தை விரும்பியது கூட குடியேற்றத் திட்டத்தை தடைசெய்வதையே. இதன் காரணமாகத்தான் மாவட்ட சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை சரியான முறையில் பயன்

(6ம் பக்கம் பார்க்க)

படுத்திருந்த பெண்ணிடம் தங்கச்சங்கிலி அபேஸ்!

[மாவிட்டபுரம்]

இரவு நேரம் வீட்டினுள் புகுந்த நபர்ஒருவர் வீட்டில் படுத்திருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டாராம்.

கொல்லங்கலட்டியில் செல்லப்பா மாமாங்கம் என்னும் பெண்மணியின் வீட்டிலேயே இந்த சங்கிலிக்கொள்ளை இடம் பெற்றது.

மேற்படி பெண்மணி வீட்டினுள் படுத்திருந்தபோது இரவு நேரம் திடீரென வீட்டினுள் புகுந்த நபர் ஒருவர் பெண்ணின் கழுத்திலிருந்த 4500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தாராம்.

வீட்டிலிருந்த வாலிபர்கள் இந்தநபரை துரத்திச் சென்றபோது வீட்டின் வெளியிலும் மேலும் இருவர் நின்றதாகவும் மூவருமாகச் சேர்ந்து ஓட்டம்பிடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் இதுபற்றி புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் வி. இரத்தினசபாபதி தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளது. [க]

தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பினான்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பினான்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

இன்று ஆரம்பமாகும் (ஏப். 21-

இலங்கைத் தீவுக்கே பெருமைதேடித்தரும் சரித்திர முக்கியத்துவ மாநாடு!

மேன்மைகொள் சைவநீதி உலகெங்கும் விளங்கும் பொருட்டு வெகு கோலாகலமாகக் கொழும்பு மாநகரில் இன்று ஆரம்பமாகிறது அகில உலக இந்து மாநாடு.

இம்மாநாடு, அகில உலக இந்துக்கலாச்சார வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமைகின்றது

உலகின் முதலாவது இந்து மாநாடு இதுவாகும். பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறுவதுபோல, இந்நிகழ்ச்சி இந்து சமயத்திற்குப் பெருமையைத் தேடித் தருவதோடு, நாம் வாழும் இலங்கைக் தீவுக்கே பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இம்மாநாட்டின் சிறப்பிற்கு எமது நாட்டு அரசாங்கம் ஒரு காரணமாகும். ஒரு நாட்டின் கலாச்சார வளர்ச்சிக்கு அந்நாட்டு அரசாங்கத்தின் ஸ்திரமான நிலை அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

அகில உலக இந்துக் கலாச்சாரத்திற்குப் புத்துயிரளிக்க முன்வந்துள்ளது இலங்கைப் பிரதேச அபிவிருத்தி, இந்துக் கலாச்சார, தமிழ்மொழி அலுவலாக்கல் அமைச்சு. இம்மாநாட்டின் நோக்கங்களோ மிகப் பல. இந்நோக்கங்கள் யாவும் வெற்றியடையுமானால் உண்மையிலேயே உலக இந்துமக்கள் பெரும் பயனைப் பெற்றவர்களாவர்.

மாநாட்டின் நோக்கங்கள்

இலங்கையிலும், உலக நாடுகளிலுமுள்ள இந்துக்களின் இந்து நெறி, இந்துக் கலாச்சாரம், இந்துப் பழக்கவழக்கங்கள், இந்துசமயச் சடங்குகள், கிரியைகள் ஆகியனவற்றை நாளாந்த வாழ்க்கை முறையில் வளப்படுத்தவும், வலுப்படுத்தவும், விருத்தி செய்யவும் வழி வகைகளை ஆராய்தல்.

இந்து மதத்தின் அத்திவாரமான சனாதன தர்மத்தைத் தோற்றுவித்த பாரத பூமியில் உற்பவித்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்களுடைய பாசுரங்கள், வேதாந்த, சித்தாந்த சாஸ்திரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும், அருமை பெருமைகளையும் நன்கு உணரவும், பயன்படுத்தவும் வழி வகுத்தல்.

இந்துசமயத்தின் சகல அம்சங்களையும், பூரணத்துவத்தையும் உணர்ந்து பாராட்டும் பொருட்டு உலகின் இந்துசமூகங்களுக்கிடையே கருத்துப் பரிமாறக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றினை உருவாக்குதல்.

இளைய தலைமுறையினர் தமது சமயத்தின் அரும்பெரும் செல்வங்களையும், நீண்ட பாரம்பரியங்களையும், இலட்சியங்களையும் உணரவும், அவை பற்றிப் பெருமை கொள்ளவும், சமய வாழ்வில் ஆர்வத்தோடு ஈடுபடவும் வழிசெய்தல்.

இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தால் எழும் புதிய சந்தர்ப்பங்களையொட்டி, இந்து சமயக் கோட்பாடுகளையும், செயல்முறைகளையும் ஆராய்ந்து, அச்சந்தர்ப்பங்களுக்கு ஈடுகொடுக்கத்தக்க விதத்தில் அவற்றுக்கு விளக்கம் காணுதல்.

இந்து சமயத்தின் உட்பிரிவுகளுக்கிடையே இசைவையும், இந்து சமயத்துக்கும், உலகின் ஏனைய பெரும் சமயங்களுக்குமிடையே கூடுதலான விளக்கத்தையும் ஏற்படுத்தல்.

இந்து ஆன்மீக வளர்ச்சியில் இடம்பெறும் தியானம், யோகம் ஆகியவற்றுக்கு விஞ்ஞான ரீதியில் விளக்கம் காணுதல்.

இலங்கையில் வழங்கும் இந்து சமயத்தின் வரலாற்றையும், சாதனைகளையும், சிறப்பு அம்சங்களையும் விதந்து ஆராய்தல்.

இந்து சமயத்தின் வளர்ச்சிக்காக ஆராய்ச்சி, பிரசுரம், நவீன பொறியியற் சாதனங்கள் மூலம் விவரங்களைச் சேகரித்தல், உலகின் பல்வேறு பாகங்களிலும் இந்துசமயத்தின் நிலை பற்றிய தகவல்களை வழங்குதல் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன்பொருட்டு அகில உலக இந்து கேந்திர நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்படல்.

நடைமுறைப்படுத்தல்

இம்மாநாட்டின் நோக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வழிகளாவன:

உலகின் பல பாகங்களிலுமிருந்து சமய, அரச தலைவர்களையும், கல்விமான்களையும், பிரதிநிதிகளையும் பங்குபற்றுமாறும், கருத்துரைகளும், ஆலோசனைகளும் வழங்குமாறும் அழைத்தல்.

இந்துசமயம் வழங்கும் நாடுகளில் இந்துசமயத்தின் நிலைமை பற்றியும், அங்கு நிலவும் விசேட அம்சங்கள் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவித்தல்.

இம்மாநாட்டிற்கு ஏற்ற சிறப்பு மலரொன்றினை வெளியிடுதல்.

கருத்தரங்குகளும், ஆராய்வுகளும்.

பூசை, யாகம், யக்ஞம் முதலிய இந்துசமயக் கிரியைகளை உரிய முறையில் நடத்துவதற்கான செயல்முறைகள்.

பண்ணிசையும். ஓவத அத்தியமனமும்.

யோகம், தியானம் ஆகியவை பற்றிய செயல்முறை விளக்கங்கள்.

இந்துசமய அடிப்படையிலான சங்கீதம், நடனம் நாடனம் ஆகியவை அடங்கிய கலாச்சார நிகழ்ச்சிகள்.

பல வகைப்பட்ட இந்து சமய அம்சங்களை எடுத்துக் காட்டும் கண்காட்சி.

இலங்கையிலுள்ள இந்து ஆலயங்கள், சிற்பங்கள் ஆகியன பற்றிய விவரங்களைச் சேகரித்து மாநாட்டின்போது சமர்ப்பித்தல்.

இலங்கை அறிஞர்களால் ஆக்கப்பட்ட இந்துசமய நூல்களைச் சேகரித்து நூற்காட்சி ஒன்றை நடத்துதல்.

இலங்கையின் பிரபல்யமான ஆலயங்களின் முக்கிய உற்சவங்களை ஒளிப்பதிவு செய்தலும், சமயச் சடங்குகளையும், முக்கிய கிரியைகளையும், அவற்றின் தத்துவங்களையும் எடுத்துக்காட்டும் சினிமா வீடியோ படங்களைத் தயாரித்தலும்.

இன்று முதல் எதிர்வரும் 25ந் திகதி வரை நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, மொரீசியஸ், குவைத், கென்யா, யூகோஸ்லாவியா, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி. பிரான்ஸ், ஜப்பான், நேபாளம் அமெரிக்கா, கனடா, இத்தாலி உட்பட்ட பல உலக நாடுகளைச் சேர்ந்த இந்துசமயப் பெரியார்களும், அறிஞர்களும் பங்குபற்றுகின்றனர்.

ஞாபகார்த்த முத்திரை

இம்மாநாட்டை யொட்டி ஞாபகார்த்த முத்திரை, நூல் கண்காட்சி, சிற்பநிழற்படக் கண்காட்சி ஆகியன நடைபெறுகின்றன. நூல் கண்காட்சியில் இந்து சமயத்தின் தொன்மையையும், பெருமையையும் புகழையும் எடுத்தியம்பும் அரும்பெரும் நூல்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

சிற்ப நிழற்படக் கண்காட்சியில் காண்பதற்கரிய சிற்பங்களும், நிழற்படங்களும் காட்சிக்கு வைக்கப்படும் தமிழ் நாட்டில் பூம்புகார் ஸ்தாபனத்திலிருந்து தருவிக்கப்படும் இந்துசமயக் கடவுளரின் திருவுருவச் சிலைகள் காட்சி குவைக்கப்பட்டு பின்னர் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படும்.

இந்து சமயத்திற்கென ஒரு அமைச்சை நிறுவி எமது சமயத்திற்கும் இந்நாட்டில் ஒரு தனித்துவமான இடத்தை வழங்கியுள்ள எமது ஜனாதிபதி இந்த மாநாட்டை தொடக்கி வைப்பது மிகப் பொருத்தமுடையதாகும். பிரபல நாத்திகியும் பரதநாட்டியத்தில் பல ஆராய்ச்சிகளைச் செய்துவருபவருமான கலாநிதி செல்வி பத்மா சுப்பிரமணியத்தின் நடன நிகழ்ச்சி தொடக்கவிழாவிலும் தமிழக அரசு ஆஸ்தான நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் நடன நிகழ்ச்சி இறுதிநாள் விழாவிலும் நடைபெறுவது இம்மாநாட்டின் சிறப்பம்சங்களாகும்.

சாதுக்கள் தரிசனம் 22ம் திகதி காலை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறுவது மற்றொரு சிறப்பம்சமாகும்.

கலை நிகழ்ச்சிகளில் உள்நாட்டு வெளிநாட்டு கலைஞர்கள் பங்கு பற்றுகின்றனர். எமது பாரம்பரிய கலைகளான காவடி, கரகம், வசந்தன் ஆட்டம் ஆகியவற்றுடன் பண்ணிசை, இன்னிசை, படக்காட்சி நாதஸ்வரக் கச்சேரி, இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து என்பன இடம் பெறுகின்றன.

உள்நாட்டுக்கலைஞர்களுடன் சீர்காழிகோவிந்தராஜன், நாம கிரிப்பேட்டை கிருஷ்ணன் சகோதரர்கள், திருமதி எம். எல். வசந்தகுமாரி, இளைய ராஜா குழுவினர், சூலமங்கலம் சகோதரிகள் ஆகியோரது கலைநிகழ்ச்சிகள் பொது மக்களுக்கு பெருவிருந்தாக அமைகின்றன.

மாநாடு ஆரம்பதினம் காலை, உலகமக்கள் சகல வளங்களும் பெற்று உய்யும் வண்ணம் பெரும் யாகமொன்று கொழும்பு வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

பண்டாரநாயக்காசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொடக்கவிழா, நிறைவுவிழா தவிர்ந்த ஏனைய 3 நாட்களிலும் (22 முதல் 24வரை) இந்து சமய ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல வெளிநாட்டு உள்நாட்டு சமய பேரறிஞர்களால் வாசிக்கப்படும்.

இம்மாநாடு இந்து சமயத்திற்கு புத்துயிர் அளிப்பதோடு உலகில் ஈழத்திருநாட்டின் பெருமையையும், புகழையும் நிலைபெறச் செய்யுமென்பதில் ஐயமில்லை.

உண்மை இந்து யார்?

ஆதிப் பரம்பொருள் ஆடலால் – புவியில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
நீதி நிலைதிட நின்றிடும் – உண்மை
நெஞ்சினில் கண்டவன் என்றுமே
ஏதுக்களாலும் எடுத்திடு – பொருள்
எத்துணையானும் விளங்கிடா
ஓதற்கரிய ஒருபொருள் – அதன்
உண்மை யுணர்ந்தவன் இந்துகாண்!

மனிதகுலம் ஒன்றுகக் கூடியே – உயர்
மாண்புள சிந்தனை செய்யவும்
புனிதமிகுந்திடு இலட்சியம் – ஒன்றே
போற்றிய யாவரும் உய்யவும்
கனியும் இதயங்கள் நன்றுக என்றும்
கலந்து களித்த உணரவும்
இனிய வழிகாட்டி நிற்பவன் – எங்கும்
ஏற்றமுறும் தனி இந்துகாண்!

ஏழை முகத்தினில் ஈசனைக் – கண்டு
இரங்கி எடுத்தள்ளியீகுவான்!
வாழவழி பல காட்டியே – நல்ல
வாய்மை மலர்ந்திடு தொண்டனுய்த்
''தாழ்வெனும் தன்மையே தாங்கியே'' – என்றும்
தன்னலமற்றுத் துறவி போல்
ஏழ்புவி தாங்கும் கடமையே – இனி (து)
ஏற்பவனே உண்மை இந்துகாண்!

வெள்ளமெனப் பத்தி மேலிட – மெய்மை
மிக்க நன் மந்திரம்! தந்திரப்!
விள்ளற் கரிய மருந்தெனும் – மூன்றும்
மேவும் உருக்கொளும் ஈசனை
உன்னத் திலன்புக் கயிற்றினுல் – கட்டி
ஒன்றியே நின்று நன்கேத்தியே
எள்ளளவும் மன மாசின்றி – கடன்
எங்கும் புரிபவன் இந்துகாண்!

தன்னையுணர்ந்தவன்! இந்துகாண்! – என்றும்
தன்னைப் பிறருக்களிப்பவன்!
முன்னைப் பழம்பொருள் மூர்த்தியின் – இயல்
முற்றும் உணர்ந்தவன் இந்துகாண்!
நன்னய மெங்கும் புரிகுவான் – உயர்
ஞானத்தினில் நடமாடுவான்!
இன்னலும் இன்பமும் ஒன்றெனச் – சமம்
எய்தியவன் ஒரு இந்துகாண்!

மானத்தைப் போற்றியே வாழ்பவன் – மங்கை
மார்தங்கள் கற்பையும் பேணுவான்!
தானந் தருமமுந் தாங்குவான் – கல்வி
தழைத் திடத் தக்கன ஆற்றுவான்!
தீனர்க்கும் பந்துவாய்ச் சீலமும் – நோன்புச்
செல்வமும் போற்றிச் செறிவுறின்
ஞானம் மிகுமென்று நாட்டுவான் – நல்ல
முத்தியுங் காட்டுவான் இந்துகாண்!

ஆக்கம்: வித்துவான் சி. ஆறுமுகம்

'பக்தன்'

புனித பூமியாகி

இந்துசமயப் பேரவையின் செயலாளர் திரு. ஏ. தியாகராஜன் விடுத்திருக்கும் ஆசிச் செய்தி:

இந்த மாநாடு உலக வரலாற்றுச் சிறப்புடையதாகும். இம்மாநாடு இன, மத, மொழி, கலாசாரம், பண்பாடு இவைகளுக்கிடையே நற்பாலமாக நிங்சயம் திகழும்.

உலக மக்களிடையே அவ்வப்போது தெரிந்தோ, தெரியாமலோ, தலையாட்டும் பூசல்கள், குழப்பங்கள் இவைகள் இனி ''ஆதவனைக் கண்ட பனித்துளிபோல'' மறைந்து போகும். இலங்கைத் திருநாடு தவயோகிகள், அறிஞர்கள், பெரியோர்கள் ஆகியோர் இங்கு அவதார புருஷர்களாய் ஒன்று சேர இருப்பதால் இது இந்திரலோகமாகவே மாறி விட்டது.

இல
கோயில்களிலேயே
கோபுரமாம்
குடநீராட்டுப்
மாநாடு சூட்டுவ
இனி புனித பூமி
அருள்ஞானப்
வலம் வந்த கும
இருள் நீக்கும் இ
உலகுக்கு ஒளி
மருள் நீக்கும் இ
மாநாடு நடத்
திரு இராசதுரை
உழைக்கின்றார்
— ஏ. தி

"ச

(நாவல

நாட்டின்
நோக்கினாலும்
ஒரு கால த்தி
கிலும் பரந்து
யும், சகோதர
நாட்டியதற்கா

இலங்
குழு

மகாநாட்டில்
ளும் இலங்
விபரம்:—

கு. பாலசிங்க
நிரந்தரக் கா
தார அமைச்சு.

வி. இராம
(யாழ். பல்கலைக்

நீதி அமைச்
நிலங்க விஜயர

என். சுப்பிரம
பல்கலைக்கழகம்.

ஐயாத்துரை
(யாழ். பல்கலைக்

கலாநிதி ஏ.
(யாழ். பல்கலைக்

பேராசிரியர்
மயில்வாகனம்.

கலாநிதி ப
(பேராதனை பல்

சி. சிவநேசன்

நவாலியூர் சோ
ஆத்மஜோதி ந

கே. வி. எஸ்.
ளுள் வீரகேசரி
யர்.)

எம். ஞான
இளைப்பாறிய
வரா அதிபர்.)

திருமதி
சதாசிவம்.

திருமதி மகே
செல்வம் (பேரா
கழகம்.)

திருமதி இ
தினம் (இளைப்
அதிபர்.)

25) அகில உலக இந்துமாநாடு

த்திர காலத்துக்கு முன்பிருந்தே இந்துசமயம் இங்கிருக்கிறது''

-- அமைச்சர் இராசதுரை

பிட்டி)

எத் திசையை
இந்துசமயம்
நாடடங்கி
ய உணர்வை
றவையும்நிலை
சான்றுகள்

கைக்
பரம்

லந்துகொள்
குழுவின்

(முன்னுள்
தரிசி சுகா

ரு ஷ் ணன்
ழகம்.)

ர் கலாநிதி
ணை.

ரியம் (யாழ்.

ருணைந்தம்
ழகம்.)

ணமுகதாஸ்
ழகம்.]

ர். டபிள்யூ.

ம நா தன்
லக்கழகம்.)

தானந்தம்.
முத்தையா

ாஸ் (முன்
தம ஆசிரி

ரகாசம்
. பரமேஸ்

காம்பிகை

வரி அருட்
ன பல்கலைக்

ரு நவரத்
ய கல்வி

றது

திருநாமம்
ம்வளர்த்து
ாழும்பிலே
ணி யான
வ். இது
விட்டது.

வேண்டி
உலகம்
னப் போல்
மதம்
தன்னை

கையிலே,
மூதல்
ற்கு
ன்று
ப்பகலாய்
நப்பணி
ாழ்கவே.

ராஜன்,
லூர்.

நிரம்பவும் உண்டு. பௌத்த சமயமும் இந்து சமயமும் பிரிக்க முடியாத பெரும் தொடர்புகளை உள்ளடக்கியுள்ளன. இரு சமயங்களும் பாரத புண்ணிய பூமியிலேயே தோன்றின. இரு சமயங்களையும் தனதாக்கிக் கொண்டது ஈழமணித்திருநாடு.

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்துகலாசார, தமிழ்அலுவல்கள்அமைச்சர் கு. செ. இராசதுரை அகில உலக இந்துமாநாட்டை யொட்டி ஆத்மஜோதிநிலையத்தினர் வெளியிட்டுள்ள சிறப்பு மலருக்கு அளித்துள்ள ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. செ. இராசதுரை மேலும் அச்செய்தியில் இந்து சமயம் தோன்றி, செழித்து வளர்ந்த புண்ணிய பூமிகளில் இலங்கையும் ஒன்று. சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இந்துசமயம் இந்த நாட்டில் வேரூன்றி வளர்ந்திருக்கின்றது.

பன்னிருதிருமுறை பாடிய பெரியோர்கள் இந்தமண்ணில் பெருமையோடு இன்றும் தலை நிமிர்ந்து நிற்கிற புண்ணிய ஸ்தலங்களில் பாடி இருக்கிறார்கள். யோகிகளும், சித்தர்களும், சமயப் பெரியார்களும் காலத்திற்குக்காலம் இந்நாட்டில் திருஅவதாரம் செய்து இந்துசமயத்தை வளர்த்திருக்கிறார்கள். இந்துசமயத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில் இந்து சமயத்திற்கென நமது அதிஉத்தம ஜனதிபதி ஒரு தனி அமைச்சினை நிறுவியது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகிவிட்டது. உலகம் முழுவதிலும் வாழும் 62கோடி இந்து மக்களுக்கும் பெருமை யளிக்கும் இனிக்தம் செய்தியாக இந்த அமைச்சின் ஆரம்பம் ஆகிவிட்டது.

இந்தச் சிறப்புவாய்ந்த உலக இந்து மகாநாட்டில் அகில உலகிலுமிருந்து; ரிஷிகள் சாதுக்கள், இந்துசமய ஸ்தாபனங்களின் பெருமைக்குரியவர்கள். ஆதீனங்கள், குருமடாதிபதிகள், இந்துசமயத்தின் சிறப்பியல்புகளை ஆராய்ந்தபின் சமயத்தின் பேராசிரியர்கள் போன்றோர் கலந்து கொள்ளஇருக்கிறார்கள்.

இம்மாநாட்டினை ஒட்டி இலங்கையிலிருந்துவெளிவரும் 'ஆத்மஜோதி' இதழ் ஒரு சிறப்புமலரை வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 'ஆத்மஜோதி' இதழ் இந்தநாட்டில் தொல்லைகள், சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் சமயப்பணி ஆற்றி வருகிறது.

இம்மலருக்கு ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யசுவாமிகள். கிராமிய கைத்தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மற்றும் கடல்கடந்த நாடுகளின் சமய நிறுவனங்கள் ஆதியனவும் ஆசியுரை வழங்கியுள்ளன.

சுமார் முந்நூறு பக்கங்களுக்கு மேற்பட்ட இம்மலரில் நூற்றுக்கு அதிகமான சிறப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இன்றைய நிகழ்ச்சி

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்று அகில உலக இந்து மாநாட்டை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொடக்கி வைப்பார்.

நிகழ்ச்சி நிரல்

பிற்பகல் 3–00 மங்களஇசை (நாதஸ்வரம்) திரு. என். கே. பத்மநாதன் கோஷ்டியினர்.

3–45: பேராளர்கள், பார்வையாளர்கள், அழைப்பாளர்கள் வருகை.

4–10: பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்கள்வருகை.

4–20; அதி உத்தம ஜனதிபதி, அவர்களும் திருமதி ஜயவர்த்தனா அவர்களும் வருகை.

4–40: பூசை மந்திர பாராயணம்–தேவாரம்

4–50 ஜனதிபதி அவர்கள் மாநாட்டைத் தொடக்கிவைத்தல்.

5–05: வரவேற்புரை: பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்துகலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சர் செ. இராசதுரை.

5–20: ஜனதிபதி உரையாற்றுவார்.

5–30: சமயத் தலைவர்கள் உரையாற்றுவார்கள்

மாலை 6–30: மலர் வெளியீடு

பத்திமைச் சமுதாயம்

''உண்மையான பத்திமை வாழ்க்கையில் விளங்கினால் சிக்கல்கள் இல்லை; பகையில்லை, போரில்லை, சட்டங்களின் தொகுதி இல்லை. மார்க்சு மாமுனிவர் கண்ட அரசற்ற சமுதாயம் அமையும், பண்பட்ட நிலத்தில் விளைச்சல் பெருகி உயர்வதைப்போல் பத்திமைச்சமுதாயத்தில் அன்பு பெருகும்; அருள் வளரும்; எங்கும் சமநிலை காட்சியளிக்கும்''.

—குன்றக்குடி அடிகள்

6–40: பரிசில்கள் வழங்கல் திருமதி ஜெயர்த்தனா.
நன்றியுரை–திரு.கி. லக்ஷ்மணஐயர் (தலைவர், செயலாக்கக் குழு)

6–40: பக்திப் பாடல்கள் சீர்காழிஎஸ்.கோவிந்தராஜன்.

கலை நிகழ்ச்சி

இரவு: *7 30:* கலாநிதி (குமாரி) பத்மா சுப்பிரமணியம்

9–30: ''பாரத நிருத்தியம்''

வடமாகான மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்!

ரூபாய் 5000க்கும் அதிக பெறுமதிமிக்க

பரிசுகளை வென்றெடுங்கள்!!



National
National
நாஷனல்

SONY
THE ONE AND ONLY
சொனி

வர்ண-கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை
எமது ஸ்தாபனத்தில்
1982 மே மாதம் 15 ந் திகதி வரை
கொள்வனவு செய்யும் பற்றுச்சீட்டுக்குரிய அதிர்ஷ்டசாலிகளே
இப்பரிசுகளை வென்றெடுக்கும் வாய்ப்பினை அடைவர்

✭ முதலாம் பரிசு: நாஷனல் (கறுப்பு வெள்ளை) தொலைக்காட்சிப் பெட்டி
✭ இரண்டாம் பரிசு: ஏஷியா சைக்கிள்
✭ மூன்றும் பரிசு: நாஷனல் றைஸ் குக்கர்

ஆகிய பெறுமதிமிக்க பரிசுகளை வென்றெடுக்க இன்றே விரையுங்கள்
உதாரவாதத்திற்கும் அதிசிறந்த சேவைக்கும்

எஸ். சின்னத்துரை அன்பிரதர்

39, கே. கே. எஸ். வீதி, :: :: யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 283 -- 284. தந்தி: ''கல்கி''

ஹரன் பாழ்.நகரி
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாவன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30,6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே
இனிக்கும்

Regal
Daily 10-30, 2-15, 4-30,
7-00 9-30
CLINT EASTWOOD
in
THE
ENFORCER

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45,
7-00, 9-30
Burt Reynolds – Catherine Deneuve in
HUSTLE

பெலிண்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.–தேவிகா
குமுதம்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
குழந்தையும்
தெய்வமும்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெயலலிதா, நம்பியார்
தாய் (புதிய பிரதி)

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—
ஸ்ரீபிரியா—சுபாஷினி— நாகேஷ் நடித்த
★நட்சத்திரம்★
(ஈஸ்மன்ட் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15
21-4-82 — 22-4-82 மட்டும்
நாகேஷ் சௌகார்
எதிர்நீச்சல் (புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
(யாழ்ப்பாணம்)
21—23-4-82 வரை
சிவாஜி கே. ஆர். விஜயா
எதிரொலி (புதிய பிரதி)

From 24th
Future Woman

ஜூன் மாதத்தில் கொடித்தினம்

ஒரு லட்சம் ரூபா திரட்ட தமிழ்இளைஞர்பேரவைமுடிவு

[யாழ்ப்பாணம்]

தமிழர் வாழும் மாவட்டங்களில், இயக்கரீதியாக கொடித்தினம் நடத்துவதன் மூலம், மக்களிடமிருந்து ஒரு ரூபா வீதம், குறைந்தது ஒரு லட்சம் ரூபாவை இவ்வருடம் ஜூன் மாதத்தில் திரட்டுவதென தமிழ் இளைஞர் பேரவை தீர்மானித்துள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுகூட்டம், செயற்குழு உறப்பினர் திரு. சபா. செந்தில்ராசா இல்லத்தில் திரு. மாவை சோ. சேனுதிராசா தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை, வவனியா, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்தும், செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

இக்கூட்டத்தில்கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பு வேலைகளைச் செய்வதற்கு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒருவர் வீதம் அமைப்பாளரை ஒரு மாதத்துள் நியமிக்கவேண்டும். என்றும்;

த. இ. பேரவை, மாணவர் பேரவை உறுப்பினர்களை திரட்டி அமைப்புவேலைகளைச் செய்யவேண்டும். 1982 ஜூலை மாத இறுதிக்குள் அமைப்பு வேலைகளைச்செய்து முடித்தல் வேண்டும்;

தமிழ் இளைஞர் பேரவை மாநாட்டை 1972 ஜூலை மாத இறுதியில் நடத்தவேண்டுமென்றும் அடுத்த செயற்குழுவில் எங்கு நடத்துவதென்பதைத் தீர்மானிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

[க

குடியேற்ற திட்டம்...

3ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தி இவற்றை தடை செய்ய வேண்டும் என்ற மாவட்ட சபை மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வாழ முடியாத சூழ்நிலை

'சென்ற ஆண்டு எமது மண்ணிலேயே எமக்கு நடந்த சம்பவத்தின் பின் நாம் எமது மண்ணிலேயே கூட சுதந்திரமாக வாழமுடியாத ஒரு சூழ் நிலையில் மக்கள் காணப்படுகின்றார்கள். இதன் ஒரு பகுதியில் யாராவது ஒன்று செய்தால் அதற்காக மக்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டும். கடைகள் தீக்கிரையாக்கப்பட்டும் வருகின்றன. இதனை நாம் தடை செய்யவே கிராமமட்டத்தில் எமது இளைஞர்களைக் கொண்டு ஊர்காவல்படை அமைக்கப்பட வேண்டும் என்று அரசை வலியுறுத்தி அதன் மூலம் அரசு இன்று யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் 2000 பேரை எடுத்து பயிற்சியும் அளிக்கவுள்ளது.

சர்வதேச மட்டத்தில்

சர்வதேச மட்டத்தில் இலங்கையில் நடந்த பிரச்னைகளை நான் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று எடுத்துக் கூறினேன். இதனைத் தொடர்ந்து சர்வதேசசபை இலங்கையில் நடந்த கொடுமைகள் பற்றி ஓர் புத்தகத்தையே எழுதி வெளியிட்டுள்ளது. நான வெளிநாட்டுப் பயணத்தை முடித்து இங்கு வருமுன்னரே எம்மைப் பயமுறுத்தி அடக்கும் நோக்கமாக எந்த ஒரு பாராளுமன்றத்திலும் நடைபெறாதநிகழ்ச்சியாக எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து இராஜ தந்திரிகளுக்கான கடவுச்சீட்டைப் பறிக்கவேண்டும், சுடவேண்டும், கிழிக்க வேண்டும், தூசகிலிடவேண்டும் என்றெல்லாம் பேசி இறுதியில் அது அவர்களுக்குள்ளேயே பிரச்னையைத் தோற்றுவித்ததுடன் ஒருவர் ஆளுங் கட்சியில் இருந்து விலக்கப் பட்டும் மற்றவர்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்கவும் செய்யப்பட்டார்கள்,

அரசுடன் பேச்சுவார்த்தை

''இன்று அரசுடன் மேற் கொள்ளும் பேச்சுவார்த்தை கூட எமது மக்கள் எமது பகுதியிலேயே நிம்மதியாக வாழ வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. எம்மிடையே இருந்த ஒற்றுமைதான் 1977ம் ஆண்டில உலக அரங்கில் எமது நிலைக்கு

ஜனதிபதியின்.....

3ம் பக்கத் தொடர்ச்சி)

கலையைச் சேர்ந்தவர்களாவர்.

நுவரேலியா —கண்டி வீதி, யில் புசல்லாவைகக அருகாமையிலேயே இவ்விபத்துஇடம் பெற்றது. (கி)

முக்கியத்துவத்தைப் பெற்றுத் தந்ததுடன் பாராளுமன்றத்தில் முக்கிய இடத்தையும் பெற்று தந்தது. ஆசையஞல் நாம் எமது இலக்கில் இருந்து எப்பொழுதும் விலகமாட்டோம்.

''கடலில் செல்லும் கப்பல் தளபதிக்குத் தான் தெரியும் எப்பொழுது கப்பலை வேகமாக செலுத்தவேண்டும், மெதுவாக செலுத்த வேண்டும், நேராக செலுத்த வேண்டும், திருப்பிச் செலுத்தவேண்டும் என்று, சூறுவளிக்கு ஏற்பவே கப்பலும செல்லவேண்டும். அதனைவிடுத்து ஒரே வேகமாக எல்லா நேரத்திலும் கப்பலை செலுத்தினால் அது உடைய வேண்டிய சூழ் நிலைதான் ஏற்படும். கப்பலை உடைய விட தளபதியினால் முடியாது. ஆகவே 'தமிழ் ஈழம்' என்ற துறையை கட்டாயம் கப்பல்சென்றடையும். ஆகவே எம்மிடம் இருக்கும் ஒற்றுமையை நாம் இழக்கக் கூடாது.''

உடுவில் உதவி அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நிர்வாக மேற் பார் வை யா ளருமான திரு. செபநாயகமும் பேசினர். (க)

பொன் விழா ஒலிம்பியப்போட்டி

லண்டன், ஏப். 20

பி. பி. சி. வெளிநாட்டு ஒலிபரப்புப் பகுதியின் 50 வது ஆண்டு நிறைவுவிழா வை முன்னிட்டு ஓலிம்பிய போட்டியொன்று நடத்தப்படுகிறது. போட்டியில் வெற்றி பெறுவோர்க்குத் தலா இரண்டு பேருக்கான 'பிரிட்டிஷ் உல்லாச விடுமுறைக்கான' செலவுகளோடு, ஓலிம்பிக் கலைக்குத் தேவைப்படும் சில பொருள்களும் பரிசாக வழங்கப்படும்.

வெற்றிபெறும் மூன்று ஓலிம்பியங்களின் சார்பில் மூவிரண்டு, ஆறு பேருக்கு பிரிட்டனில் உல்லாச விடுமுறைப் பரிசுகளும், ஏனைய ஓலிம்பிக் பொருள்களும் வழங்கப்படும். பி.பி.சி. உலக நேயர்களுக்கான போட்டிஇது.

இந்தப்போட்டியின்முழுவிபரங்களை பி.பி.சி. ஒலிபரப்புக்களில் கேட்டலாம். எனவே 'தமிழோசை'யிலும் விபரங்கள் ஒலிபரப்பாகும். போட்டியில் ஓலிம்பியங்கள் 1982, ஆகஸ்ட் 31 க்குள் லண்டனுக்குக் கிடைத்தாக வேண்டும்.

விளையாட்டுப் போட்டியில் ஈடுபடத்தடை

இஸ்லாமாபாத், ஏப். 20

பாகிஸ்தானில் பெண்கள் விளையாட்டுப்போட்டிகளில் ஈடுபடுவதற்கு ஜனதிபதி ஷியாவுல் ஹக் தடைவிதித்துள்ளார். (வெ

இன்றைய பலன்

சித்திரை மாதம் 8ம் திகதி
புதன்கிழமை
(21—4—82)

மேடம்: பேச்சு வன்மையால் பெரும்புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித் தரும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கும்.

இடபம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்தியவழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடைஏற்படும்.

மிதுனம்: வாகனம் செலுத்துபவருக்கு இன்று நன்மதிப்புக் கிடைக்கும். தாய்வழித் தனவரவிற்கும் இடமுண்டு. முன்னேற்றமான சுபதினமாகும்.

கடகம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும். பரோபகார சிந்தை மேலிடும். நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

சிங்கம்: பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும். தடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

கன்னி: தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சிகாணப்படும். குடும்பத்தில் தென்றல் வீசும். சுவையான நிகழ்ச்சிகள்இடம் பெறும். அறிஞர்களுக்குஇன்று சுவையான தினம்

துலாம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும். மறைமுக எதிரிகள் உறவு விடயத்தில் பிரிவுக்குறைவு ஏற்படும்.

விருச்சிகம்: இறைவழிபாடு மேலிடும். இதன்மூலம் இல்லத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

தனு: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்ததநாள். கவர்ச்சிகரமான பொருளை வாங்குவதில் அதிக கவனஞ் செலுத்துவீர்கள். இடமாற்றமும் ஏற்படலாம்.

மகரம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கும்பம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உரிமையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும்.

மீனம்: தொழில் புரியுமிடத்தில் கருத்துவேற்றுமை தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

கும்பாபிஷேகமும் வில்லிசையும்

[தலைமன்னார்]

சைவ நேயாளர்களின் வழிபாட்டுக்கென மன்னார் ஆதாரவைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள பாலமுருகனுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

வைத்தியசாலையிற் பணிபுரியும் அன்பர்கள் பலரினதும், பெருமுயற்சியால் உருவாக்கப்பட்ட பிரஸ்தாப பாலமுருகன் ஆலய மகாகும்பாபிஷேக வைபவத்தில் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான அடியார்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் இடம்பெற்ற 'பொன் சிவா' குழுவினரின் 'திருவிளையாடல்' வில்லிசைக் கச்சேரி வெகுவாகப் பாராட்டப்பட்டது. (அ)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கையில், 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஆலடிச் சந்தி, வே. சி. கந்தையா, (தேனீர்க் கடை) அவர்களிடம் விபரங்களை அறியவும். 2867

யாழ்ப்பாணம் – கல்வியங்காட்டில் ஆறுபரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு மூன்று பரப்புகளாகவும் விற்கப்படும். விபரங்களுக்கு:– 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2904

வாடகைக்கு

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து 300 யார்தூரத்தில் சங்கானை பிரதானவீதியில் 4 அறைகள், சமையலறை, இருக்கையறை, மின்சாரம் மற்றும் வசதிகளுடனும், தென்னையின் பிரயோசனங்களுடனும் வீடு வாடகைக்குண்டு. தொடர்புகொள்ளவும். நடராசா, விவசாயக்கந்தோர் ஒழுங்கை, 852/19, பருத்தித்துறை வீதி, நல்லூர். 2907

தேவை

பெண்களின் உடைகள் வெட்டித் தைக்க அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. விண்ணப்பிக்கவும், வசந்தா வஸ்திராலயம், 20, மக்கள் நவீனசந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம். 2910

இசுசு லொறி திருத்த வேலைக்கு கேள்வி கோருதல்

பொடி புதுப்பித்தலும் யந்திர வேலையும்

1. யந்திர வேலை.
2. பொடி புதுப்பித்தல்.
   1. பொடி அடித்தல்.
   2. மை பூசுதல்.
   3. லேற் வேலை.

மேற்படி திருத்த வேலை செய்து புனரமைப்பதற்குக் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை 28–4–82ந் திகதிக்கு முன் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கவும். லொறியை 24–4–82ல் பார்வையிடலாம்.

பதில்
பொது முகாமையாளர்.
ஊர்காவற்றுறை
2922 ப. நோ. கூ. சங்கம்.

வட்டுத்தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை

பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ்/மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் அண்மையில் பெற்ற 2 நற்சாட்சி நற்சான்றிதழ்ப் பிரதிகளுடன் (கிராம சேவையாளர் உட்பட) 10–5–82க்கு முன்பாக தலைவர், வட்டுத்தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம், சங்கானை என்ற முகவரிக்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் பதவியின் பெயர் குறிக்கப்படல் வேண்டும்.

1. பொது முகாமையாளர் தரம் III

கல்வித்தகைமைகள்:–

1. கூட்டுறவுப் பயிற்சிபெற்றுள்ள பட்டதாரி.
   அல்லது
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம்.
   அல்லது
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர். அல்லது
4. ரூபா 2,000,000/– இன்ன வருடாந்த மொத்த விற்பனவாகக்கொண்ட வியாபார ஸ்தாபனம் ஒன்றின் மேல் முகாமை பதவி ஒன்றில் 3 வருட கால அனுபவமுடைய ஒருவர்.

வயது:– 25—50க்கும் இடைப்பட்டதாக இருத்தல்வேண்டும்.

5. வேதனம்:– 340—590 / 15×10 20×5

பிணை:– காசுப்பிணை ரூபா 2000/–

2: காரியாலய சேவகன்

1. ஒரு வருடத்திற்குக் குறையாத கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிய அனுபவமும், ஐந்தாந்தரச் சித்தியும். அல்லது
2. 8ஆந்தரச் சித்தி.
3. சம்பளம்:– 150—212 / 5×10 6×2
4. வயது:– 18—30.

3. வாகனச்சாரதி

1. ஐந்தாந்தரக் கல்வியில் சித்தியும் பஸ்/லொறி/ட்ராக்டர்/டெயிலர் சாரதி லைசன்சுடன் 2 வருட அனுபவமும்.
2. பிணை;– ரூபா 2000/–
3. சம்பளம்:– 225—12.50×8. 15×7—460
4. வயது:– 25—40.

சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
2920

அடுத்த சில வருடங்களில் நல்ல எதிர்காலம்!

ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

"அடுத்த சில வருடங்களுக்குள் இந்த நாட்டு மக்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு. எமது அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல பலனளித்துள்ளன".

மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா ஐ. தே. கட்சியின் நிர்வாக குழுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்த நாட்டிற்கு ஐ. தே. கட்சி தலைவர்களே சுதந்திரம் பெற்றுக் கொடுத்தனர். திருமதிபண்டாரநாயக்காவின் தவறான நடவடிக்கைகளினாலேயே அவரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

"திருமதிபண்டாரநாயக்கா தமது ஆட்சிக் காலத்தில் குற்றமிழைக்காதவர்களை கைது செய்தார். பத்திரிகைகளுக்கு சீல் வைத்தார். பொதுத்தேர்தலை உரிய காலத்தில் நடத்தாது ஒத்திவைத்தார்.

இக் கூட்டத்தில் பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசா, ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் ஆகியோரும் உரையாற்றினர்.
(வெ)

சிறைச்சாலைகள் நிரம்பிவழிகின்றன

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கைதிகள் சிறைவாசம் அனுபவித்துவருகின்றனரென்றும், இவர்களைப் பராமரிக்க அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் நிதி போதாதிருக்கிறதென்றும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைச் சிறைச்சாலைத் திணைக்களம் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: "அரசாங்கம் 50 லட்சம் ரூபா சிறைச்சாலைப் பராமரிப்புக்காக ஒதுக்கியுள்ளது. ஒரு கைதிக்குத் தினம் பத்து ரூபா வரை பராமரிப்புக்காகச் செலவாகின்றது. இந்நிலையில் நாடு முழுவதிலுமுள்ள கைதிகளை

(8ம் பக்கம் பார்க்க)

பொலிஸ் விசாரணையால் அவமானம் தாங்காமல் தற்கொலை

(சாவகச்சேரி)

பொலிசார் விசாரணை செய்ததினால், அவமானம் தாங்காமல், இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

இத்தாவிலைச் சேர்ந்த 21 வயதான பொன்னையா பாலகிருஷ்ணன் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

பிரேப்பகுதியைச் சேர்ந்த மரணவிசாரணை அதிகாரி திரு. எம். குமாரவேலு மரணவிசாரணையை நடத்தினார்.

சாட்சிகளாகக் காலமானவரின் தாயார் தங்கம்மாவும், தகப்பன் பொன்னையாவும் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்கள் தமது சாட்சியத்

(8ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

FOR SALE

Toyota Corolla KE 20 8 Sri 2000 series for sale. Immaculate condition 45 m. p. g. Owner Engineer leaving abroad. For first offer above 72,000/– Seen by appointment contact: No. 350, Point Pedro Road, Nallur, Jaffna. 2908

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

காரைநகர், அறுகம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லைநாதன் கைம்பெண் தங்கமுத்துவின் மரணசாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

வழ. இல. ரி/62

தில்லைநாதன் சிவகுமாரன், காரைநகர் தற்போது கனடா. அவரின் தத்துவ காரன் தில்லைநாதன் இராஜசேகரம் மூலமாக

— மனுதார்.

எதிராக

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982–ம் ஆண்டு சித்திரை மாதம் 29ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாகப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 5–ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

[ஒப்பம்]
ஏ. சிறில்,
பதிவாளர்.

வரைதல்;
[ஒப்பம்]
செ.மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
2892

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கை இலக்கம் 21ஐச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் செட்டியார் மறுபெயர் இராமலிங்கம் சோமசுந்தரம் அவர்களின் மரணசாதனச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/3659

இராமலிங்கம் சோமசுந்தரம் கைம்பெண் இராசநாயகி மறுபெயர் ரத்தி (21) 51/10 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு வைகாசி மாதம் 28ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாகப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 5ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி,

(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைதல்
(ஒப்பம்)
அ. உமாசங்கர்,
மனுதாரின் சட்டத்தரணி.
2894

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: ரி/3655

காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற கிறேஸ் பரிமளம், சிவானந்த ராஜா என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

திருமதி நேசரட்ணம் குமாரசுந்தரம், 46/4, 1–ம் ஒழுங்கை, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு வைகாசிமாதம் 14–ம் திகதியன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982–ம் ஆண்டு மாசிமாதம் 3–ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

[ஒப்பம்]
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைதல்:
[ஒப்பம்]
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி
289

நீண்டநாள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவுச் சுற்றுலா விடுதியில் அன்று தங்கினேன்.

''அடுத்தநாள் நான் மகேந்திரனையும், அவரது மனைவி மாலினியையும் சுற்றுலா விடுதியில் கண்டேன். அன்றைய தினம் அங்கு சிலவெளிநாட்டவர்களையும் சந்தித்தேன்.

''மகேந்திரன்பற்றி நான் அங்குள்ளவர்களிடம் விசாரித்தபோது அவர் ஒரு கணக்காளர் என்று அறிந்து கொண்டேன்.

''அன்றைய தினம் நாங்கள் அறிமுகமாகி மேலும். அன்றிரவு ஒன்றுகச் சாப்பிட்டோம்.

பண்ணைச் சம்பவம்

''எப்போது இப்பக்கம் வந்தாலும் இங்கு தங்கலாம் என்றும், அவசியம் வருமாறும் மகேந்திரன் என்னிடம் அன்று கூறினார்.

''இதனைத் தொடர்ந்து அடிக்கடி நாங்கள் எல்லோரும் வெளியில் செல்வது வழக்கம். ஒருநாள் நானும், மாலினியும், மகேந்திரனும் யாழ். பண்ணைக்குக் காரில் சென்றோம். பண்ணை பாலத்தில் வைத்து நான் மது அருந்தினேன். மாலினியும் சுமாராக மது அருந்தினார்.

''அவர் மது அருந்துவதை ஓர் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார் என்பது எனகுப் பின்னர் தெரியவந்தது.

''முதல் சந்திப்பின் பின்னர் மூன்று நான்கு தடவைகள் நாங்கள் சந்தித்தோம்.

''மகேந்திரன் இல்லாத நேரங்களிலும் நான் அங்கு செல்வது உண்டு. மாலினியுடன் தனிமையில் நான் தங்கியிருக்கின்றேன். பல நாட்கள் நாங்கள் இருவரும் வெளியூர்களுக்கும் உல்லாசமாகச் சென்றுள்ளோம்.

புதுவருட தினத்தன்று...

''புதுவருட தினத்தன்று நாங்கள் அனைவரும் கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திருப்பிக் கொண்டிருந்தோம். அப்போது நேரம் பகல் ஒன்றரை மணி இருக்கும். வீடு திரும்பும் வழியில் ஒரு வாகனத்தைச் சந்தித்தோம்.

''அந்த வாகனத்தில் வந்தவர் எனது சிநேகிதர். அவரை மகேந்திரனுக்கும் தெரியும்.

சம்பவதினம் இரவு....

''அன்று இரவு மகேந்திரன் கொழும்பு செல்லவேண்டியிருந்தது. நானும் மாலினியும அவரை ரயில்நிலையம் வரை சென்று வழிஅனுப்பி வைத்தோம்.

''இதற்கு முன்னர் அன்றையதினம் இரவு சுமார்எட்டு மணியளவில் நானும் மகேந்திரனும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். மகேந்திரன் முகத்தில் மாற்றம் காணப்பட்டது.

''மகேந்திரனை ரயில் நிலையத்தில் அனுப்பிவிட்டு மாலினியுடன் நான் ஆனையிறவு வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன்.

''வீட்டுக்குப் போனதும், ''சீவியம் எனக்கு வெறுத்து விட்டது'' என்று மாலினி என்னிடம் தெரிவித்தார்.

''வீட்டு முன் மண்டபத்தில் நானும் மாலினியும் கதைத்துக் கொண்டிருந்தபோது; 'அன்றுகாலையில் ஒருவாகனத்தில் வந்த நண்பரை எப்படித் தெரியும்''என்று என்னிடம் மாலினி கேட்டார்.

''அதனைக்கிளற வேண்டாம் என்று நான் கூறிய போது; கொழும்பில் யசோதா என்ற பெண்ணைப் பற்றித் தெரியுமா என்று அவர் கேட்டார்.

''ஒரு கட்டத்தில் மாலினி; ''நான் எதையும் செய்யலாம். எனக்கு என்று ஒருவர் இருந்தால் எனக்காக இருக்கவேண்டும்...'' என்று தனது கணவர் பற்றி வருத்தப்பட்டுக் கூறினார்.

நள்ளிரவு வரை பேசினோம்

''புதுவருட தினத்தன்று நானும் மாலினியும் நள்ளிரவு வரை பேசிக்கொண்டிருந்தோம். அதன் பின்னர் நித்திரைக்குச் சென்றோம்.''

இந்தக் கட்டத்தில் விசாரணை நிறுத்தப்பட்டு இன்று வரை பின்போடப்பட்டது.

நாடறிந்த தமிழறிஞர் மறைவு

(யாழ்ப்பாணம்)

வித்துவான் ஐ. கி. நடராஜன் காலமானார்.

ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் பெரும்புலமையும் பேச்சாற்றலும் வாய்ந்தவர் வித்துவான க. கி. நடராஜன். ஈழத்தில் நடந்த எத்தனையோ இலக்கிய மாநாடுகளிலும் சமய மாநாடுகளிலும் கலந்து கொண்டு இலக்கிய ஆர்வலர்களுக்கும், சமய அன்பர்களுக்கும் செவிச் செல்வம் வழங்கியவர் அவர். அவரது இலக்கியத்திறனையும் சமயத் திறனையும் ஈழத்து அறிஞர்கள் மட்டுமன்றித் தமிழ்நாட்டு அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

பேச்சாற்றலுடன் எழுத்தாற்றலும் கொண்டு விளங்கிய வித்துவான் அவர்கள் சிவதொண்டன் சமயஏட்டின் ஆசிரியராக இருந்து பலஆண்டுகள் பணிபுரிந்தார்.

தெய்வபக்தியும் சமயப்பெரியார்களை மதிக்கும் பண்பும் கொண்ட இவரின் மறைவு தமிழ் உலகிற்கும் சைவ உலகிற்கும் பேரழப்பாகும்.

சிறைச்சாலைகள்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிப்பது மிகவும் கஷ்டமானதாகவே இருக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலைகளிலுள்ள ஒரு லட்சத்த பத்தாயிரம் கைதிகளில் ஐயாயிரம் பேர் நீண்ட காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களென்றும் ஏனையவர்கள் மூன்றிலிருந்து ஆறு மாத காலத் தண்டனைக்குள்ளானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறுகியகாலத் தண்டனைக்காகக் குற்றவாளிகளைச் சிறைச்சாலைகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாகப் புனர்வாழ்வு இல்லங்களுக்கு அனுப்பும் வகையில் நீதி அமைச்சு ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறதென்றும் தெரியவருகின்றது. (கி)

பொலிஸ்.....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தங்கள் மகனுக்கெதிராக மிளகாய் களவெடுத்ததென்று பொலிசில் ஓர் முறைப்பாடு இருந்ததாகவும், சில தினங்களுக்கு முன் சாவகச்சேரிப் பொலிசார் வந்துஅதைப்பற்றி விசாரித்துச்சென்றனர்என்றும் தங்கள் பிள்ளை அவமானம் தாங்கமுடியாத ஓர் ரோசக்காரனென்றும் இந்த அவமானத்தைத் தாங்கமுடியாமலே கிருமிநாசினி அருந்தினர் என்றும் கூறினர்கள்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எம். குமார்வேலு சாட்சியங்களைப் பதிவுசெய்தபின் தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினர். (க)

இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியாவுக்கு வெற்றியுடன் சென்று திரும்பிய யாழ். கலாசார குழுவினருக்கு கடந்த திங்கட்கிழமை மாலை, யாழ் செயலகத்தில் திட்டமிடல் பகுதியினரால் ஓர் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது

இந்த வைபவத்தில் அவசியம் கலந்துகொள்ளுமாறு கலைஞர்கள் மட்டுமன்றி பத்திரிகையாளர்களும் எழுத்து மூலம அழைக்கப்பட்டிருந்தனர்.

வைபவம் யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

விஷயம் என்னவென்றால் — பத்திரிகையாளருக்கு தேநீர் வழங்குவதில் பெரும் இழுபறி நடந்தது. தேநீர் வழங்குமாறு திட்டமிடல் அதிகாரி பணித்தும்கூட, 'அந்தச்' சிற்றாழியர் காதுகொடுக்கவில்லை. அரசஅதிபரின் அந்தரங்க உதவியாளரின் அறையில் இதுசம்பந்தமாக 'குசுகுசு' பேச்சு நிகழ்ந்து, வாக்குவாதம் நடந்தும்கூட தேநீர் வழங்கப்படவே இல்லை.

பத்திரிகையாளர்கள் என்ன 'கிள்ளுக்கீரை'யா? தேநீர் வழங்கும் 'அசிங்க'த்தைச் சகிக்காமல் வெளியேறிவிட்டார்கள்!

"ஊடுருவி"

சகோதர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதாவது:

''அகில உலகிலும் சுமார் 80 நாடுகளில் 62 கோடிக்கு அதிகமான இந்துக்கள் வாழ்கினறார்கள். அவர்கள் வாழ்வில் இலங்கையில் நடைபெறும் அகில உலக இந்து மாநாடு மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகவும எதிர்கால சந்ததிக்குப் புதிய நம்பிக்கையையும் செயல்ஊக்கத்தையும் வழங்குவதாகவும் அமையப்போகின்றது. இலங்கை மணித் திருநாட்டில் இம் மாநாடு நடைபெறுவதன் மூலம், இங்கு வாழும் இந்துப் பெருமகக்ள் ஒரு சரித்திரம் படைத்தவர்கள் என்ற பெருமையையும் புகழையும் அடையப்போகின்றார்கள்.

''வரலாற்றுச் சிறப்புமிக்க இம் மாநாட்டை அரசாங்கம் நடத்தமுன்வந்த போதிலும் இந்த நாட்டிலுள்ள எல்லா இந்துப்பெருமக்களும் இம் மாநாட்டைத் தங்கள் சொந்த வீட்டுத் திருமணவிழாவாகக் கருதிய் பங்குகொள்ளவேண்டும்; பங்கு ஏற்கவேண்டும். பார்வையாளராக மட்டுமல்லாமல், பங்காளர்களாகவும் தங்களை ஆக்கிக்கொள்ளவேண்டும்.

''கடல்கடந்த சுமார் 25 நாடுகளில் இருந்து ரிஷிகள், யோகிகள், சாதுக்கள், குருமகாசந்நிதானங்கள், அறிஞர்கள், கவிஞர்கள், பார்வையாளர்கள் ஆகியோர் இங்கு விஜயம்செய்கின்றனர். அகில உலக இந்துமாநாடு இந் நாட்டில் வாழும் இந்துக்களின் சொந்த மாநாடு. இந்த நாட்டில் வாழும் சகோதர சமயங்களின் நல்லுறவிற்கான சமரச மாநாடு.''

ஆர்ஜன்டீனா பின்வாங்குகிறது?

புவனஸ்அயர்ஸ், ஏப். 20

போக்லண்ட் தீவுகளில் பூரண இறைமை கோருவதைத் தாமதிப்பதென்று ஆர்ஜன்டீனா தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரிட்டனுடனான யுத்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவே ஆர்ஜன்டீனா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே போக்லண்ட் தீவுகள் பிரச்னைக்கு இறுதித் தீர்வொன்று காணப்படும் வரை அத்தீவில் பிரிட்டனும் ஆர்ஜன்டீனாவும் கூடுநிர்வாகமொன்றை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்குமென்றும் வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்கின் சமரச யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கர்ப்பம், பிரசவம் சம்பந்தமான செயல்காண் செயல்பாட்டு அம்சங்கள் பார்வையாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (கெ)

அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராடிய தலைவர். தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எல்லோரும் தமிழர்தான்என்ற கொள்கையுடையவர்'' என்றார்.

அமைச்சர் தமதுரையில், தனது அமைச்சின் செயல் திட்டங்களை விளக்கி, போதிய அபிவிருத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகஉறுதியளித்தார். (கெ)

விற்பனைக்கு

சிலவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

Single Pashe மோட்டர் வகைகள்

¾ – H. P. 2850 R. P. M.
1 – H. P. 2850 R. P. M.
1.5 – H. P. 2850 R. P. M.

Three Pashe மோட்டர் வகைகள்

2 – H. P. to 30 H. P.
(R. P. M. – 750, 960, 1450)

கையிருப்பில் உண்டு.

இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்
கே. ஆர். சிவலோகநாதன் அன் கோ
6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(2921) போன்:– 8289

ரெலிபங்கன் TV

நாட்டு மக்களின் நம்பகரமான பெயர்

துலக்கமான, சிறந்த ஒளியின்பம் கொண்ட கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் [T. V.] விற்பனைக்கு வந்துள்ளன. ரெலிபங்கன் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குவதனால் இலட்ச ரூபாவைப் பரிசாக வென்றிடலாம்.

கையிருப்பு சொற்பம் - விற்பனைக்குப் பிந்திய சேவை

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.

போன்: 8267

மரண அறிவித்தல்

வித்துவான் க. கி. நடராஜன் B. O. L.

வித்துவான் க கி. நடராஜன் B. O. L., சிவதொண்டன் ஆசிரியர் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற அன்னபூரணியின் கணவரும், கமலாசனி, சிவகுமாரன், யோகாம்பிகை ஆகியோரின் தகப்பனரும், காலஞ்சென்ற K. சண்முகானந்தன், பிஸ்பகவதி சிவகுமாரன், M. கனகசுந்தரம் அவர்களின் மாமனாரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (22–4–82) காலை 9–30 மணிக்குக் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

''யோக பவனம்'', 10, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

2925

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 58-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" பிரிண்டேர்ஸுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 503ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஏப்பிரல் மீ 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. the General P.O. Sri Lanka Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 77 07, 889, 8186.